**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 187 of 2024

DATE : 22.05.2025

Depositions of witness for Prosecution

PW: 4

| | | | |
|---|---|---|---|
| Name | **திரு. அக்பர் அலி** | Caste | |
| Father/Husband's Name | **மீரான் மைதீன்** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22th day of May 2025

**(எதிரிகள் ஆஜர். )**

**முதல் விசாரணை : –**

1) நான் கூமாப்பட்டி பள்ளி வாசல் தெருவில் சித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் நினைவு இல்லை. ஆஜர் எதிரிகள் ஒரு நாள் அசா.1ன் தோட்டத்தில் உள்ள போர்வெல் மற்றும் விவசாயப் பொருட்களை அடித்து உடைத்தாக பேசிக் கொண்டிருந்தார்கள். யதார்த்தமாக எதிரிகள் பேசிக் கொண்டிருந்ததாக எண்ணி அதனை நான் பொருட்படுத்தவில்லை. மறுநாள் தோட்டத்தில் சென்று பார்த்த போது தோட்டத்தில் உள்ள போர்வெல் விவசாயப் பொருட்களை உடைத்ததை பார்த்து தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக அசா.1ன் இடம் தகவல் தெரிவித்தேன். அசா.1 சம்பவ இடம் சென்று பார்த்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) அசா.1 எனது அண்ணன் மகன் என்றால் சரிதான். நான் கூமாப்பட்டி பள்ளிவாசல் நிருவாகத்தில் பொறுப்பாளராக இருக்கிறேன் என்றால் சரிதான். அசா.1 பள்ளிவாசலில் வரவு – செலவு பொறுப்பாளராக இருந்தார். அசா.1 பிறப்பால் முஸ்லீம் சமயத்தை சார்ந்தவர் என்றும், ஆஜர் 1ம் எதிரி கிறிஸ்தவ மதத்தில் இருந்து முஸ்லீம் சமயத்திற்கு சமயம் மாறியுள்ளார் என்றால் சரிதான். ஆஜர் 1ம் எதிரி பள்ளிவாசலில் தொழுகை செய்வது சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்ததா என்றால் சரிதான். பின்பு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று தான் ஆஜர் 1ம் எதிரி பள்ளிவாசலில் தொழுமைகக்கு அனுமதிக்கப்பட்டார் என்று சொன்னால் சரிதான். இது சம்பந்தமாக பள்ளி வாசல் நிர்வாகிகள் காவல் நிலையத்தில் ஆஜர் 1ம் எதிரி தொழுகை செய்வதை எந்த வகையிலும் இடைஞ்சல் செய்ய மாட்டோம் என்று உறுதி கூறினோமா என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் பேசிக் கொண்டிருந்தாக முதல்

**விசாரணையில் சொல்லியுள்ள விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லி இருக்கேனா என்றால் சொல்லியுள்ளளேன். ஆஜர் எதிரிகள் பேசிக் கொண்டிருந்தாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லாமல் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் நான் சொல்வது போல பேசிக் கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அசா.1 உடன் தான் வந்துள்ளேன் என்றால் சரிதான். அசா.1 கேட்டுக் கொண்தற்கிணங்கவும், எதிரிகள் மீது வன்மம் கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 187 of 2024

DATE : 22.05.2025

Depositions of witness for Prosecution

PW: 5

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. இதயத்துல்லா | Caste | |
| Father/Husband's Name | யூசுப் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of May 2025

(எதிரிகள் ஆஜர். )

**முதல் விசாரணை : –**

1) நான் கூமாப்பட்டி பள்ளி வாசல் தெருவில் வசித்து வருகிறேன். நான் கோழிக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். இந்த கையெழுத்தை சுமார் 10 வருடங்களுக்கு முன்பு மதியம் 2.00 மணியளவில் ஊரணி தெருவில் உள்ள அசா.1ன் கடைக்கு முன்பு போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து கொண்டிருந்தார்கள். அதன் பின்பு அசா.1ன் தோட்டமான சம்பவ இடத்தை பார்வையிட்டு போலீசார் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து கொண்டிருந்தார்கள். போலீசார் தயார் செய்த இரண்டு பார்வை மகசரிலும் கையெழுத்து செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(பார்வை மகசர்கள் முறையே (கடை) அசா.ஆ.2 மற்றும் அசா.ஆ.3 ஆக(தோப்பு) குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) நான் கூமாப்பட்டி பள்ளிவாசல் தலைவர் என்றால் சரிதான். அசா.1 எனக்கு மைத்துனர் ஆவார். அசா.2, அசா.1ன் தம்பி ஆவார். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. ஜமாத் பொறுப்பாளருக்கும், ஆஜர் 1ம் எதிரிக்கும் இடையே இருந்த பிரச்சனை காரணமாக ஆஜர் 1ம் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆஜர் 1ம் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி: பார்வை மகசரில் நான் மட்டும் தான் கையெழுத்து செய்தேனா என்றால் ஷேக் என்பவரும் கையெழுத்து செய்தார்.**

**நானும், ஷேக் என்பவரும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தோம் என்றால் இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு